பக்கங்கள் 6 விலே சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 பங்குனி 5 ரபீ அவ் 8 இதழ் 36
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18 3-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## யாழ். நகரில் அமெ. தூதர்

[யாழ்ப்பாணம்]

வடபகுதிக்கு விஜயம்செய்த அமெரிக்கத் தூதுவர் திரு. ஹவார்ட் டபிள்யு றிக்கின்ஸ் நேற்றுக்காலை ஒட்டுசுட்டானிலுள்ள அகதிகள் குடியேற்றத் திட்டங்களைப் பார்வையிட்டார். அகதிகளுக்கென அமெரிக்க அரசினுல் வழங்கப்பட்ட கூடாரங்களும், படுக்கை விரிப்புப்புக்களும் சரியான முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றிதூதுவர் அகதிகளி

(6-ம் பக்கம் பார்க்க)

# தனிநபர்போல அரசும் நஷ்டஈடு வழங்க வேண்டும்

## செம்மணிச்சூடு பரராசா நஷ்டஈடு வழக்கில் நடேசன் கியு.ஸி. வாதம்

### மே மாதம் 23க்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

அரச உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பிரஜைக்கு ஏதாயினும் ஒரு நஷ்டம் விளைவிப்பின் தனிப்பட்டநபர் ஒருவர் அந்த நஷ்டத்தை விளைவித்தால் என்ன நட்ட ஈட்டை வழங்கவேண்டுமோ அதே நஷ்ட ஈட்டை அரசும் வழங்கவேண்டும் என்று திரு.நடேசன் கியு.ஸி: நேற்று செம்மணித் துப்பாக்கிச் சூட்டு நஷ்டஈட்டு வழக்கில் தொகுப்புரை நிகழ்த்துகையில் கூறினுர்.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த இரண்டு தினங்களாக நடந்த இவ்வழக்கில் சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி திரு. ஞானகரனும் வழக்காளி தரப்பில் ஆஜரான திரு. எஸ். நடேசனும் தங்கள் தொகுப்புரைகளை நேற்று முடித்துக்கொண்டதும் இவ்வழக்கின் தீர்ப்பை மே மாதம் 23-ம் தேதி வழங்குவதாக நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் தெரிவித்தார்.

செம்மணித் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான பரராசாவின் தந்தை மாவட்ட நீதிமன்றத்தில் ஐம்பதினுயிரம் ரூபாய் நட்டஈடு கோரித்தாக்கல்செய்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்காளியான பொன்னம்பலமும், எதிரி தரப்பில் இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளையும் சாட்சியமளித்தனர். இதன் பின் மாலையில் இரு தரப்பு வழக்கறிஞர்களும் தொகுப்புரை நிகழ்த்தினர்

அரச சட்டத்தரணி திரு. ஞானகரன் தமது தொகுப்புரையை முதலில் ஆரம்பித்தார்.

**உத்தரவின்பேரில் சுடப்பட்டிருந்தால்**

அவர் தமது தொகுப்புரையில், மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் சுடப்பட்டிருந்தாலே அரசு பொறுப்பென்றும், மேலதிகாரிகளின் உத்தரவைப் பெறுமல் ஸ்டான்லி சுட்டுள்ளதால், அதற்கு ஸ்டான்லியே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டுமென்றும், எனவே அரசு நட்டஈடு வழங்கவேண்டிய அவசியமில்லையென்றும் கூறினுர்.

அவர் மேலும் தொகுப்புரை நிகழ்த்துகையில், இவர் கேட்கும் நட்டஈடு கூடிய தொகையென்றும், சீதனம், நகை கொடுக்க வேண்டியவை போன்றவற்றை இங்கு கவனத்திற்கொள்ளச் சட்டம் இடம் தரவில்லையென்றும் எனவே நட்டஈடு வழங்குவதானாலும் குறைந்த அளவிலேயே வழங்கவேண்டுமென்றும் கூறினுர்.

இவரது தொகுப்புரைக்குப் பதிலளித்த திரு. நடேசன் கியூ. சி. தமது தொகுப்புரையில், இலங்கை அரசுக்கு எதிராக நட்டஈடு கோரும் 69ம் ஆண்டுச் சட்டத்தின் 22ம் பிரிவு, அரச உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பிரசைக்கு ஏதாயினும் ஒரு நட்டம் விளைவிப்பின், தனிப்பட்ட நபர் ஒருவர் அந்த நட்டத்தை விளைவித்தால் என்ன நட்டஈட்டை வழங்கவேண்டுமோ, அதே நட்ட ஈட்டை அரசும் வழங்க வேண்டுமெனத் தெளிவாகக் கூறுகிறது எனவும் எனவே இங்கிலாந்து] ஆபிரிக்க நாட்டுச் சட்ட நடைமுறைகளை இங்கு கவனத்தில் ஏற்கமுடியாதெனவும் கூறினுர்.

**சுடுவதற்கும் கட்டளை**

அத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கையில் துப்பாக்கி குண்டுகளைக் கொடுத்துக் கடமைக்கு அனுப்பும்போது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தேவையேற்படின் சுடுவதற்குக் கட்டளையிடப்படுகிறதெனவும் எனவே அரசுதான் பொறுப்பெனவும் ஒரு ஊழியன் மேலதிகாரியின் கட்டுப்பாட்டை மீறி நடந்தால் அவரைப்பணிக்கு அமர்த்தியவரும் அதற்கு ஒரு வகையில் பொறுப்பாளி எனவும் கூறினுர் இதற்கு ஆதாரமாக பல நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளை எடுத்துக் காட்டினுர்.

**இங்குள்ள வாழ்க்கைமுறை**

இங்கிலாந்து, ஆபிரிக்கா போல் இங்குள்ள மக்களின் வாழ்க்கைமுறை அமைய வில்லை எனவும்- தேசவழமை சட்டங்கள் இங்குள்ள பெற்ருேர் பெண்களுக்குச் சீதனம் போன்ற நன்கொடைகள் வழங்குவது கடமை எனக் கூறுகின்றது என்ருர். அத்துடன் இறந்தவருக்கு 25,000 ரூபா நன்கொடையுடன் திருமணம் பேசிவந்துள்ளது

(6ம் பக்கம் பார்க்க)

## "ஸ்ரான்லியிடம் சுடும்படி நான் கட்டளையிடவில்லை"

### இன்ஸ்பெக்டர் தாமோதரம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி துப்பாக்கிச் சூட்டில் மரணமான பரராசாவின் தந்தை ஐம்பதினுயிரம் ரூபா நட்ட ஈடு கோரித் தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணையில் நேற்றுச் சாட்சியமளித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை, கான்ஸ்டபிள் ஸ்டான்லியைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி தாம் கட்டளையிடவில்லை என்று தெரிவித்தார்.

இவ்வழக்கில் முதலாம்எதிரியான சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சார்பில் சாட்சியமளிக்க இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை நேற்றுக் காலை அழைக்கப்பட்டார்.

ஸ்ரான்லியைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி

(6ம் பக்கம் பார்க்க)

## "சம்பளம் முழுவதையும் தருபவர் மகன் பரராசா"

### நஷ்டஈடு கோரும் தந்தை சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தனது முழுச்சம்பளத்தையுமே தன்னிடம் கொடுத்து வந்த மகன் பரராசா மாதம் ஆயிரம் ரூபாய்வரை சம்பளம் பெற்று முன்னேறக்கூடியவரென்றும் அவருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடையுடன் திருமணம்பேசி வந்ததாகவும்[செம்மணித் துப்பாக்கிச் சூட்டில் காலமான பரராசாவின் தந்தை சின்னத்தம்பி பொன்னம்பலம் தாம் நஷ்ட ஈடு கோரித் தொடர்ந்த வழக்கில் நேற்று சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

செம்மணித் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொன்னம்பலம் பரராசா மரணமானது தொடர்பாக அவரது தகப்பஞர் சின்னத்தம்பி பொன்னம்பலத்தினுல் நஷ்டஈடுகோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த இரண்டுதினங்களாக யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை

(6-ம் பக்கம் பார்க்க)

**தரப்படுத்தல் நீக்கத்தால்**

## பாதிக்கப்பட்ட மாணவர் புதிய வளாகங்களில் அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக வளாகங்களில் புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் அடுத்தவார மளவில் சகலருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்கள் பெற்ற புள்ளி அடிப்படையிலேயே புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் புதிதாக அமைக்கப்படும் வளாகங்களில் இம் மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் கல்வி அமைச்சு அறிவித்தது:

தரப்படுத்தல் நீக்கப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கல்வி

ஆவணி மார்கழி மாதங்களில் நடைபெறும் G. C. E. O. L. பரீட்சைக்கான வெவ்வேறு வகுப்புக்கள் 20-3-78-இல் ஆரம்பமாகும். 1979 ஆம் ஆண்டுக்குரிய A. L. வகுப்புக்கள் இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும். ஆங்கிலமும் தட்டச்சு சுருக்கெழுத்து தமிழிலும் ஆங்கிலத்திலும் படிக்கலாம். காலையிலும் மாலையிலும் வெவ்வேறு வகுப்புக்கள் நடைபெறும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். பேரூர்தி நிலயத்திலிருந்து (Bus Stand) 100 யார் தூரத்திலிருக்கிறது. 8775

## வகுப்பு

G. C. E. A/L -79 புதிய விஞ்ஞான வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும். இன்னர் அக்கடமி K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 8759

## தேவை

அனுபவமுள்ள ஜீப் றைவரும் டிராக்ரர் றைவரும் உடனடியாகத் தேவை. செல் பீற்றர் ஐஸ் தொழிற்சாலை, மூலைத்தீவு. 8783

பாடசாலை வசதிக் கட்டணப் பணத்தில் கடமையாற்ற தராதரப்பத்திரமற்ற தற்காலிக ஆசிரியர் தேவை. 22-3-78க்கு முன்விண்ணப்பிக்குக. கணிதவிஞ்ஞான தகுதி, கற்பித்தல் அனுபவம், பாடசாலை அண்மை கவனிக்கப்படும். அதிபர், மேலைப்புலோலி சைவ வித்தியாலயம், பருத்தித்துறை. 8782

க. பொ. த. [சாதாரணம்] புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு படிப்பிப்பதற்கு வர்த்தக விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, 38, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 8777

யாழ்ப்பாண நகருக்குக்கிட்ட புகையிரத நிலயத்துக்கும், நல்லூர்க் கோயிலுக்கும், ஒரு மைல் இடைப்பட்ட தூரத்தில் தொழிற்சாலை போடுவதற்கு ஏற்ற காணி குத்தகைக்கோ அல்லது விலைக்குகோ இருப்பின் உடன் அறியத் தரவும். விளம்பர இல. 8761 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8761

விவசாய வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு திடகாத்திரமுள்ள விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் தேவை. விற்பனை அபிவிருத்தியில் முன் அனுபவமும், ஆங்கில அறிவும் அவசியம். சம்பளம் சகல படிகளும் உட்பட ரூபா 300/-உம் கமிஷனும் வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில், ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8778

## விற்பனைக்கு

ஒலிவ் ஸ்நானம் பவுடர். எண்ணெய் முழுக்குக்குச் சிறந்த ஒலிவ் ஸ்நானம் பவுடரை வாங்கி உபயோகியுங்கள். தலையில் உள்ள அழுக்கு சொடுகு, பேன் ஆகியவற்றை நீக்குகின்றது. -மில்க்வைற், யாழ்ப்பாணம். 8752

நாசனல் பன்சோனிக் 531ᴰ புதிது— க அருள்வடிவன். அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. 8776

## பின்னுறுதிக் கட்டளை மற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

கொழும்பு இல. 8. லெண்சிங்கரன் காா்டன்ஸ், பம்பலப்பிட்டியா, யோசப் பார்க்கர் மாணிக்கசிங்கம் என்பவரின் மரணசாதனம் படி.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் பிஓ/386

டாக்டர் ஜெயசிங்கம் பத்மராஜன் மாணிக்கசிங்கம், இல. 8. லென்சிங்கரன் காா்டன்ஸ், பம்பலப்பிட்டியா, கொழும்பு. தற்போது வெஸ்றேன்பார்க் ஆஸ்பத்திரி, ஷெப்பீல்ட், இங்கிலாந்து.

தமது அற்ரேணித் தத்துவகாரன் அரசு வோல்ற்றன், ஆசிர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறிதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1978ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்

8772 பதிவாளர்

## யாழ்ப்பாண அக்கடமி

1. க. பொ. த. சாதாரண மீட்டல் வகுப்புக்கள்.
2. க. பொ. த. உயர்தர முதலாம் வருட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

சேரவிரும்புவோர் உடனடியாக கந்தோரில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கவும்.

அதிபர்

தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 8786

## குடமுழுக்கு வைபவம்

[சங்கானை]

சண்முகம் மயிலணி முருகமூர்த்தி கோவிலுக்கு முன்பாக சுமார் 75,000 ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய துவிதள விமான ஆலயத்தில் எதிர்வரும் சித்திரை எட்டாம் திகதி ராஜராஜேஸ்வரி அம்பாள் திருப்பெருஞ்சாந்தி குடமுழுக்கு விழா, இவஸ்ரீ ச. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இங்கிலாந்திலுள்ள டாக்டர் எஸ், சண்முகநாதன் தம்பதிகளின் உபயமாக இத்திருப்பணி இடம்பெறுகிறது [ஸ]

# கேள்வி அறிவித்தல்

## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

இந்த வளாகத்தின் திருநெல்வேலி வளவில் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்காக இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் பிரதிப் பொருளாளரினால் 1978/04/03 திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விகள் பெற்றுக்கொள்ளப்படும்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் பதில் பிரதிப் பதிவாளரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக 100/- ரூபாவும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15/- ரூபாவும் செலுத்திப் பெறக்கூடிய குறித்த படிவங்களில் கேள்விகள் அனுப்பப்படுதல்வேண்டும்.

பதில் பிரதிப்பதிவாளர்.
யாழ்ப்பாண வளாகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1978-03-13. 8765

## பாராட்டு விழா

(சுழிபுரம்)

"நேர்மை சேவை உள்ளம் யாவும் நிறைந்த ஒருவர் என்றும் மக்களால் பாராட்டப்படுவர் என்பதற்கு இன்று இளைப்பாறியுள்ள உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலத்திற்கு வழங்கப்படும் பாராட்டுவிழா சான்றாகும்" இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியம் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு வலிகாமம் மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி ஒய்வு பெற்ற திரு. சோ. அருணசலம் சேவைநலம் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சித்தங்கேணியிலுள்ள பொது இயக்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து நடாத்திய இவ்விழாவிற்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தலைமைவகித்தார்

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. நா. சுப்பிரமணியமும் பேசினார்.

(உ)

• • •

## ஆயர்களின் பேரவைக் கூட்டம்

[உடுப்பிட்டி]

இலங்கை கத்தோலிக்கஆயர்களின் பேரவைக்கூட்டம் காலி ஆயர் அதி. வந். அன்ரனி டீசேரம் தலைமையில் தேவத்தையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கத்தோலிக்கங்களின் பிரச்சினைகள், அண்மையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் முதலிய விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

## குருவாக அபிஷேகம்

[உடுப்பிட்டி]

கரம்பனைச் சேர்ந்த அருட் செல்வன் ஆர். எச். சகாறாயம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12ந் திகதி கரம்பன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் புதிய குருவாக யாழ். மேற்றிராணியார் அதி வந். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்படுவார்.

இவர் ரி. பி. இராஜநாயகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார். காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் கண்டி தேசிய குருபீடம், திருச்சி புனித சின்னப்பர் குருமடம் ஆகியவற்றில் தனது ஞானக் கல்வியைப் பெற்றுக் கொண்டார்.

கல்வித்திட்ட மாற்றம்:

# "கல்விமான்களின் ஆலோசனை பெறவேண்டும்"

## பரு. எம். பி. யோசனை

(கரணவாய்)

"விளையாட்டுப் போட்டிகள் வாழ்க்கைக்கு மிகவும் வேண்டிய பல நற்பண்புகளை எமக்குக் கற்றுத் தருகின்றன. வெற்றிதோல்வியைச் சமமாகக் கருதுதல் கட்டுப்படும் தன்மை தலைமைதாங்கும் தன்மை முதலிய நற்பண்புகளை விளையாட்டுப்போட்டிகள் இளமைக்காலத்தில் கற்றுத்தருவதால் எமது பிற்கால மேம்பாட்டில் விளையாட்டுப் போட்டிகள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார். கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வநாயகம் தலைமையில் நடந்த இவ்விளையாட்டுப்போட்டியில் திரு. இராசலிங்கம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாட்டில் விளையாட்டுத் துறையை [விருத்திசெய்வதற்காக அரசாங்கம் அதற்கெனத் தனியானதோர் அமைச்சை உருவாக்கி அதன்மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்கிறது. உள்ளத்தின் வளர்ச்சிக்கு கல்வி

[5-ம் பக்கம் பார்க்க]

## தேவை

உடனே தேவை M. B. B. S. வைத்திய கலாநிதி தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைகள்,
395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

8767

வீரசிங்கம் மண்டபத்தில்
20-3-1978 திங்கட்கிழமை
மாலை 6-30 மணிக்கு இடம்பெறும்

## பரத நாட்டிய நிகழ்ச்சியில்

பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்
யாழ். கலைமன்றத்தின் ஆதரவுடன்
அளிக்கும்
(சென்னையைச் சேர்ந்த பிரெஞ்சு நாட்டிய தாரகை)

## மேனகா

நுழைவுச்சீட்டு:- ரூ. 10/-, ரூ 7/-, ரூ 5/-
கூட்டாக வரும் மாணவர்களுக்கு மட்டும் ரூபா 3/-
யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெரு 130 இல் உள்ள யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்திலும் கொமேஷல் வங்கியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

8744

## லோகநாதன் இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### புதிய வகுப்புகள் ஆரம்பம் 1-4-78

G. C. E. O/L ஒகஸ்ட் பரீட்சைக்குரிய முழுநேர வகுப்புகள்

G. C. E. A/L 1979 ஏப்பிரல் பரீட்சைக்கான வகுப்புகள்

தகைமைகள்:- G. C. E. O/L 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும் அல்லது 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும். அதில் 3 பாடங்களில் திறமை சித்தி இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சொந்த விலாசமிட்ட தபாலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-3-78

# மரண அறிவித்தல்

## நெல்லியர் கனகசபை அல்லது நவரெத்தினம்

நெல்லியர் கனகசபை - அல்லது நவரெத்தினம் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய உயரப்புலம் பாடசாலை ஆசிரியர் காலமானார்.

இவர் ஸ்ரீதரன் (U. K.) உடைய அன்புத் தந்தையும், ஈவினை செல்லத்துரை, திருமதி ஞானம் செல்லத்துரை ஆகியோரது அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரது பூதவுடல் 78-3-19-ம் திகதி மாலை 4 மணியளவில் ஈமக்கிரியைக்காக அவருடைய இல்லத்திலிருந்து கிராம மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

8789

ஈழநாடு
The Eelanaadu

## வளாக மாணவர் மோதல்

கொழும்பிலுள்ள பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர் கோஷ்டிகளுக்கிடையில் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற மோதல்களில் கைக்குண்டு வீசப்பட்டிருப்பதும் பயங்கர ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதும் அதிர்ச்சிதரும் சம்பவங்களாகும்.

சென்ற புதன்கிழமை கொழும்பிலுள்ள பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர்கள் அடையாள வகுப்புப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது. மறுநாளும் சில மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். பகிஷ்கரிப்பில் சேராது வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்களைப் பகிஷ்கரித்த மாணவர்கள் தடுத்ததாகவும் இதைத் தொடர்ந்து மோதல் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

வெளியார் சிலரும் இதில் கலந்துகொண்டு மாணவர்களைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் குழப்பங்களுக்குக் காரணம் என்னவென்பது இதுவரை சரியாகத் தெரியவில்லை

ஆயினும் இக்குழப்பத்துக்குக் கட்சி அரசியல் பின்னணி இருக்கவேண்டுமென்று கருதப்படுவதில் தவறு இருக்கமுடியாது.

மாணவர்கள் கட்சி அரசியல் ரீதியாக இயங்குவதும் மாணவர் சங்கத் தேர்தல்களில் கட்சிரீதியில் போட்டியிடுவதும் இதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரவளிப்பதும் மாணவர்களுக்கிடையில் பூசலையும் மோதலையும் ஏற்படுத்தக் ஒரு காரணமென்று சொல்லலாம்.

மாணவர்கள் அரசியலைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். படிப்பு முடியும் வரை கட்சி அரசியல் சகதிக்குள் காலை விடாது வழிகாட்டவேண்டியது அரசியல் தலைவர்களின் கடமையும், பொறுப்புமாகும்.

துரதிர்ஷ்டவசமாக மாணவர்களைத் தமது கட்சியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவது, நமது நாட்டில் மட்டுமல்ல, வேறு பல நாடுகளிலும் பழக்கமாகிவிட்டது.

இதேசமயம், பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் சிலரும் கட்சி அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதும், பல்கலைக்கழக நியமனங்கள் கட்சி அரசியல் அடிப்படையில் நடைபெறுவதும், பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர்கள் மத்தியில் பிளவும் பூசலும் ஏற்படுவதற்கு மற்றொரு காரணமென்று சொல்லலாம்.

பல்கலைக்கழக வளாகங்களுக்கு மாணவரை அனுப்பும்போதும் அவர்களுடைய நடவடிக்கைகள் குறித்தும் பெற்றோரும் அக்கறையுடன் கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

நமது நாட்டில் பல்கலைக்கழக வளாகங்களில் பகிஷ்கரிப்பும், மோதல்களும் ஏற்படுவதும், வளாகங்களை மூடிவைப்பதும் அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாகிவருகின்றன.

இது, மாணவருக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல.

ஒழுக்கமும், கட்டுப்பாடுமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்கவேண்டியது இந்நாட்டின் அரசியல், சமய, சமூகத் தலைவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

அடிக்கடி பல்கலைக்கழகங்களை மூடுவதைவிட, சீனாவில் சில வருடங்களுக்கு முன் நடந்தது போன்று, பல்கலைக்கழகங்களைச் சிறிது காலத்துக்கு மூடிவைத்துவிட்டுத் தார்மீக ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முதற்படியாகக் "கலாசாரப் புரட்சி" ஒன்றை ஏற்படுத்தியாவது ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க முயற்சிசெய்து பார்த்தால்கூடப் பரவாயில்லை என்றே தோன்றுகிறது

# "அடிவாங்கி அவமானப்பட்டபின்பே பல உண்மைகளை உணர்கின்றோம்"

## தமிழர்களின் பலவீனம் பற்றி கல்லூரி அதிபர்

(மன்னார்)

"தமிழர்களாகிய நாம் எதையும் முன்கூட்டியே அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக இருந்துவந்துள்ளோம். பல உண்மைகளை அடிக்குமேல் அடிவாங்கி அவமானப்பட்டபின்பே உணர்ந்திருக்கின்றோம். எங்களுக்குச் சொந்தமில்லாதவற்றின் மீது உரிமை கொண்டாடுவதும் எங்களுக்குச் சொந்தமானவற்றைக் காப்பாற்றத்தவறுவதும் மடைமை. மன்னார் வாழ் இந்துப் பெருமக்கள் உரிமை கொண்டாடக்கூடிய ஒரே ஒரு கல்லூரி சித்திவிநாயகர் கல்லூரியே. இதைக் கட்டிக்காக்கவேண்டிய பெரும்பணி இந்தப் பெற்றோர்களுடையதே." இவ்வாறு மேற்படி கல்லூரி அதிபர் திரு. நகுலராஜா ஜெயபாலசிங்கம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

"ஆசிரியர்கள் வருவார்கள் போவார்கள். அதிபர்கள் இருப்பார்கள் மாறுவார்கள். ஆனால் ஆண்டாண்டு காலத்திற்கு மன்னார் சைவமக்களுக்காக இக்கல்லூரி இயங்கிக்கொண்டேயிருக்கும். இதை வளர்க்கவேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோர்களுடையதே" என்றும் அதிபர் தொடர்ந்து கூறினார்.

மேற்படி கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நகுலராஜா ஜெயபாலசிங்கம், உபதலைவர்: திரு. எம். கதிரவேலு, செயலாளர்: திரு. என். வேதமணி, உபசெயலாளர்: செல்வி எம். இரத்தினசிங்கம், பொருளாளர்: திருமதி கே. சிவகுமாரவேலு, உபபொருளாளர்: திரு. எஸ். லோகநாதன்.

மன்னார் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். ஷெரிப், சித்திவிநாயகர் ஆலய பரிபாலகர் திரு. கே. கே. வைத்திலிங்கம் ஆகியோர் காப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அறுவர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## கூட்டணி ஆண்டுவிழாக் கூட்டம்

(கொழும்பு)

தந்தை செல்வாவின் 80-ம் ஆண்டு நிறைவு விழாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை, இராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளராக கவிஞர் காசி ஆனந்தன் கலந்துகொண்டு "செல்வாவின் வழி செல்வோம்." என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

## மணிவாக்கு

வாலிபம் அதிசயிக்கத்தக்க சக்தி வாய்ந்தது. ஆனந்தமயமான மனக்கோட்டை கட்டிக் களிப்பதிலும் பகற்கனவு காண்பதிலும் வாலிபத்துக்கு அலாதிப் பிரியம்.

—பென் ஜான்சன்

# "இனவிடுதலை கருதியே அரசுடன் சிலவேளைகளில் ஒத்துப்போகிறோம்"

## காவலூர் எம். பி. பேச்சு

(யாழ்ப்பாணம்)

"கடந்த ஆண்டு இந்த நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம், இந்த நாட்டில் தமிழ் தேசிய இனம் சிங்கள தேசிய இனத்துடன் இணைந்து வாழமுடியாது என்பதை நிரூபித்துவிட்டது. பெரும்பான்மை இனத்துடன் இனியும் ஒற்றுமையாக வாழமுடியாது என்ற நிலையைக் கண்டோம். இந்நிலையில் எம்மைப் பாதுகாக்க "தமிழ் ஈழம்" தவிர வேறொன்றும் சாத்தியமல்ல. இதனால் எமது போராட்டத்துக்கு கூட்டணிக் கிளைகளை வடக்கு, கிழக்கு, மலையகத்தில் புத்துயிரளித்து எம்மைத் தயார் செய்துவருகின்றோம்" என்று சரவணை த. வி. கூட்டணிக் கிளையை புனரமைப்பு செய்து வைத்துப் பேசிய காவலூர் எம்; பி. பண்டிதர் கா.பொ இரத்தினம் குறிப்பிட்டார்.

### இன,விடுதலை கருதியே

அவர் தொடர்ந்து பேசுகையில், "இன்று நாம் பொருளாதார சுதந்திரம் பெற்ற இனமாக வாழவேண்டும். அதற்காகவே சில நடவடிக்கைகள் எமது தொண்டர்களுக்கு மனக்கசப்பை ஏற்படும்வகை அரசுடன் செயல்படவேண்டிய நிலையில் உள்ளோம். இது எமது இனவிடுதலைக்காக இயங்கவேண்டியுள்ளது. கூட்டணி வேலைவங்கி விண்ணப்பத்தை ஏற்பதும் இதனால் தான். வேலைகளுக்கு சிபார்சு செய்யும்போது எனது தொகுதியில் எனக்கு வாக்களித்தவர், வாக்களிக்காதவர் என்ற பேதம் இன்றி குடும்ப நிலவரம், தகுதி ஆகிய நிலைமைக்கு முக்கியத்துவம் அளிப்பேன்" என்றார்.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: இ. நகுலேசபிள்ளை, உபதலைவர்: ந. கந்தையா, செயலாளர்: சோ. தனபாலசிங்கம், உபசெயலாளர்: சோ. நாகேந்திரம், தனாதிகாரி: சி. மனலிங்கம். நிர்வாக சபை உறுப்பினராக 7 பேரும் தெரிவாகினர். (கெ-உ)

நினைவாஞ்சலிக் கட்டுரை

# 'சித்திர கவிப்பாவலர் வன்னியூர்க்கவிராயர்'

[எஸ். கே. சண்முகநாதன் — மல்வம், உடுவில்]



— வவுனியா மாவட்டத்திலுள்ள வெங்கலச் செட்டிகுளம் கிழக்கு இலுப்பைக்குளம் என்னும் எழிற்கிராமத்தைத் தாயகமாகக் கொண்ட அமரர் எஸ். எல். சவுந்தரநாயகம் "வன்னியூர்க் கவிராயர்" அவர்கள்... வவுனியா—மன்னார் மாவட்டங்களிலே எட்டுத் தலைமுறை வரையில் பிரபல்யம் வாய்ந்தவொரு கவிஞர் பரம்பரையில் தோன்றிய சந்திரோகுப்பிள்ளைப் புலவர் அன்னம்மா தம்பதியர்க்கு அருந்தவப்புதல்வரொருவராகத்தோன்றியவர். மன்னார் நல்லாயன்கலாசாலையிலேகல்வி பயின்றவர். தந்தையின் கவித்துவத்தை முது சொத்தாகப் பெற்ற இவர் சிறந்த சித்தாயுர்வேத வைத்தியருமாவார்.

—எழுத்தாளனாகவும் வைத்தியனாகவும் உடல் உள நோய்களுக்குச் சிகிச்சைசெய்வதே தொழிலாகவும்; அதையே மக்கள் தொண்டாகவும் கருதி இறுதிவரையில் பணியாற்றியவர். தன்னம்பிக்கை - தளரா ஊக்கம் - விடாமுயற்சிகளே வெற்றிக்கு வழியென்று கருதி, கடந்த 1953ம் ஆண்டிலிருந்து இலக்கிய உலகிற் காலடி எடுத்துவைத்து பிரபல பத்திரிகைகள் பலவற்றிலும் நிறைய எழுதியிருக்கின்றார். கடந்த 1966ம் ஆண்டில் 'ஈழநாடு' இதழில் - பலவாரக் கணக்கில் இடம்பெற்ற "கடற்கரையில்-தாமரை மலருமா...? மலராதா...?" என்ற விவாதக் கட்டுரையில் தலையிட்டு அதனை முடித்துவைத்தார். குறித்த விவாதம் தென்புலோலியூர் பண்டிதர் வி. பரந்தாமன் என்பவருக்கும் மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் என்பவருக்குமிடையில்தான் நடைபெற்றது. இலக்கியப்பரப்பில் மிக ஆழமாகத் தனது காலடிகளைப் பதித்த கவிராயரின் தனித்திறமை 'கவிதை' வாயிலாகவே வெளிப்பெற்றன... மிகவும் கஷ்டமான பாவினங்களான சித்திரகவியினைத் தேர்ந்தெடுத்து - நாகபந்தம்- சக்கரபந்தம் - தேர்ப்பந்தம்- நீரோட்டம் - போன்ற கவிகளை யாத்து 'ஆயிரத்திலொரு கவிஞர்' என்று பாராட்டப்பெற்றார். எஸ். எல். சவுந்தரநாயகம் என்ற பெயரில் மாத்திரமன்றி - சவுந்தரன், எஸ். எல். எஸ். மனோகரி, பரவேந்தன், வன்னியூர்நாயகம் போன்ற புனைபெயர்களிலும் எழுதியிருக்கின்றாராயினும், காலப்போக்கில் பிறந்த மண் பற்றினை எடுத்தியம்பும் 'வன்னியூர்க் கவிராயர்' என்ற புனைப்பெயரே அவரது முத்திரையினை வெளிப்படுத்தும் பெயராக மாறியது.

கவிராயர் தனது இருபது வருடகால இலக்கிய அறுவடையில் கன்னிமுயற்சியாக சிறுகதைத் தொகுப்பு நூலொன்றினை "ஈழத்துக்காவியதீபகம்" என்ற பெயரில் கடந்த 1973ல் வெளியிட்டார். இலக்கிய உலகில் மாத்திரமன்றி அரசியலிலும் குறிப்பிடத்தக்களவு பணியாற்றிய கவிராயர் பல இன எழுச்சிக் கவிதைகளும் எழுதியிருக்கின்றார். பொதுவிழாக்கள் பலவற்றிலும் குறிப்பாக பிரபல கவிப்ரங்குகளிலெல்லாம் கலந்துகொண்டு கவிதை பாடியிருக்கின்றார். பல்கலைக்கழக வானொலிக் கவியரங்கிலும் பங்குபற்றிய கவிராயர் 1966ம் ஆண்டில் சின்னச்செட்டிகுளம் கிழக்கு கிசவின் அங்கத்தவராகவும் துணைத்தலைவராகவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இறுதிநிகழ்ச்சியாக கிளிநொச்சியில் நடைபெற்ற 'உழவர் விழா'வில் கலந்துகொண்டு கவியரங்கிற்குத் தலைமைவகித்தார். சிறுகதைத் தொகுப்பையடுத்து - கவிதைத் தொகுப்பும் - கட்டுரைத் தொகுப்பு நாவல் ஆதியன வெளியிடவும் திட்டமிட்டிருந்தார். அதனைச் செயல்படுத்த காலம் விட்டுவைக்கவில்லை. நாளை கவிஞரின் நினைவுமலர் வெளியீடும் - பஸ்தரிப்பு நிலைய நிலையத் திறப்புவிழாவும் நடைபெறுகின்றன கவிராயரின் பல இலக்கியக் கருவூலங்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் சிலவற்றை மேலும் நூலுருக் கொடுப்பதே கவிராயருக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாகும்

கோப்பாய்

# திறந்தவெளி சிறையில் மும்மத ஆலயங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு உட்பட்ட கோப்பாய்த் திறந்தவெளிச் சிறைச்சாலையில் இந்து, பௌத்தவ, கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன

இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதத்தவர்களது பிரார்த்தனை வசதியின் பொருட்டும் பரந்துபட்ட ரீதியிலான இன, மத ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையிலும் இவ்வாலய அமைப்புகளை யாழ் சிறைச்சாலை அதிபர் திரு. கந்தையா தங்கராஜா ஏற்படுத்தியுள்ளார்.

திரு. தங்கராஜாவின் முயற்சியாலும், பிரமுகர்களது நிதி ஒத்துழைப்பினாலும் இவ்வாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரார்த்தனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. [உ]

## இன்று

வண்ணை சிவன்கோவிலில் 13ம் திருவிழாவாகிய இன்று பகல் திருவிழா காலை 9 மணிக்கும். இரவு திருவிழா மாலை 6-30 மணிக்கும் சுவாமி மூஷிகம், அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் திருவீதி வலம் வருதலும், இரவு 8 மணி முதல் தமிழ்மணி திரு. பி. கணேசசுந்தரத்தின் "இசையும் இறைவனும்" என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் நிகழும்.

நான்கு உறுப்பினர்கள் ராஜினுமா:

# ஆட்டம்காணும் நிலையில் பாண்டிச்சேரி அரசு

பாண்டிச்சேரி, மார்ச் 17

**பாண்டிச்சேரியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஆட்டங்காணும்நிலை ஏற்பட்டுள்ளது.**

**பாண்டிச்சேரி சட்ட சபையில் இருந்து அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் நால்வர் கட்சியில் இருந்து நேற்று ராஜினுமாச் செய்த தனையடுத்தே இந்நிலை உருவாகியுள்ளது.**

பாண்டிச்சேரி சட்டசபையின் துணை சபாநாயகர் திரு. பழனிவேல், திரு. தங்கவேல் உட்பட நான்கு அ. இ. அ. தி. மு. க உறுப்பினர்கள் தமது ராஜினுமா குறித்து நேற்றிரவு கூட்டு அறிக்கை ஒன்றினை வெளியிட்டனர்.

### தலைமைப் பீடத்தில் அதிகார போக்கு

கட்சித் தலைமைப்பீடத்தின் அதிகாரப் போக்கே தமது ராஜினுமாவுக்குக் காரணமென்றும் தாம் சட்ட சபையில் தனிக் கோஷ்டியாக இயங்கப் போவதாகவும் இவர்கள் தம் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நிலையான ஆட்சியை அமைக்கக்கூடிய கட்சிக்குத் தாம் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் இவர்கள் கூறியிருக்கின்றனர்.

### ஜனதா உறுப்பினர்கள்

ஜனதா கட்சி உறுப்பினர்களான திரு. வரதப்பிள்ளையும் திரு. ராமஜெயமும் இவர்களது ராஜினுமாவையடுத்து எழுந்துள்ள நிலைகுறித்துத் தாம் கட்சியின் தலைமைப்பீடத்துடன் தொடர்புகொண்டிருப்பதாகவும், பாண்டிச்சேரி லெப்டினென்ட் கவர்னர் குல்கர்ணியைச் சந்திக்கவிருப்பதாகவும் கூறினர்.

இவர்கள் நால்வரும் ராஜினுமா செய்ததனையடுத்து அ. இ. அ. தி. மு. க.வின் உறுப்பினர் தொகை பதினென்றுகக் குறைந்துள்ளது.

### கட்சியின் நிலை

தற்போது அங்குள்ள கட்சிகளின் நிலை பின்வருமாறு:

| | |
|---|---|
| அ. இ. அ. தி. மு. க:— | 11 |
| ஜனதா— | 8 |
| தி. மு. க.— | 3 |
| காங்கிரஸ்— | 2 |
| கம்யூனிஸ்ட்— | 1 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்— | 1 |

சட்ட சபையில் பட்ஜட் அறிக்கை இம்மாதம் 22ம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (உ)

எம். ஜி. ஆர். திரட்டும் நிதி:

# ரூ $6\frac{1}{2}$ கோடியைத் தாண்டியது

சென்னை, மார்ச் 17

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் வெள்ளநிவாரண நிதிக்கு இதுவரை 6 கோடியே 72 லட்சத்து 39,000 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது.

இதுதவிர 1550 அமெரிக்க டாலர்களும் 50 பிரிட்டிஷ் பவுண்களும் இந்நிதிக்கு சேர்ந்துள்ளன.

அரசின் பத்திரிகைக் குறிப்பு இத்தகவலை வெளியிட்டது. (உ)

## மிளகாய், வெங்காயம் கருவாடு இறக்குமதி

(கொழும்பு)

இவ்வாண்டு பாகிஸ்தானில் இருந்து பல உணவுப்பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

கருவாடு, மிளகாய், வெங்காயம் என்பனவற்றை இறக்குமதிசெய்வது தொடர்பாக பாகிஸ்தானுக்குப் பேச்சுவார்த்தை நடத்த கூ. மொ. விற்பனவு ஸ்தாபன பிரதித் தலைவர் தலைமையில் சென்றிருந்த தூதுக்குழு வெற்றியுடன் நாடு திரும்பியுள்ளது.

வெந்தயம், சீரகம், மல்லி என்பனவும் இறக்குமதியாக உள்ளன. (உ)

# இலங்கையர்ன் ஜனநாயகக் கோட்பாடுகள்

## பிரான்ஸ் ஜனுதிபதி பாராட்டு

பாரிஸ், மார்ச் 17

இலங்கை மக்களின் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு பிரெஞ்சு ஜனுதிபதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் புதிய இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. மெண்டிஸ், பிரெஞ்சு ஜனுதிபதியைச் சந்தித்து உரையாடியபோதே ஜனுதிபதி இப்பாராட்டைத் தெரிவித்தார்.

இலங்கை மக்கள், ஜனநாயகக் கோட்பாட்டினை எவ்வளவு தூரம் பேணுகிருர்கள் என்பதற்குக் கடந்த தேர்தல் முடிவு நல்லதோர் எடுத்துக்காட்டு என்று ஜனுதிபதி குறிப்பிட்டார்.

பொருளாதார விஷயத்தில் பிரான்ஸின் நடைமுறை குறித்து திரு. மெண்டிஸ் பாராட்டுத் தெரிவித்தார்.

# இஸ்ரேலியத் தாக்குதல்: சதாத் பகிரங்க கண்டனம்

கெய்ரோ, மார்ச் 17

லெபனுன் மீதான இஸ்ரேலின் தாக்குதலை எகிப்திய ஜனுதிபதி அன்வர் சதாத் பகிரங்கமாகக் கண்டித்துள்ளார்.

இஸ்ரேலியர் கொலைசெய்யப்பட்டபோது எகிப்து எப்படி கண்டனம் தெரிவித்ததோ அதேபோன்றதுதான் இக் கண்டனமும் என்று சதாத் தெரிவித்தார்.

இவ் விவகாரத்தில் சமரசத்தைத் தோற்றுவிக்க எகிப்து தன்னுல் இயன்ற சகலவற்றையும் செய்யும் என்றும் அவர் சொன்னுர்.

இஸ்ரேலியத் தாக்குதல் குறித்து மொரோக்கோ மன்னரும் கண்டனம் தெரிவித்துள்ளார். (உ)

இந்திராவுக்கு கறுப்புக்கொடி:

# 'நகரசுத்தி வண்டிகளும் கொளுத்தப்பட்டன'

## கமிஷன்முன் சாட்சியம்

சென்னை, மார்ச் 17

திருமதி இந்திராகாந்தி கடந்த வருடம் அக்டோபர் மாதம் 30ம் திகதி சென்னைக்கு விஜயம் செய்தபோது கிண்டியிலும், சைதாப்பேட்டையிலும் நடைபெற்ற கலவரங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# விமான விபத்து 73 பேர் புலி!

லண்டன், மார்ச் 17

பல்கேரிய விமானம் ஒன்று வீழ்ந்துநொறுங்கியதால் அதிலிருந்த 73 பேர் மாண்டனர்.

ருமேனிய எல்லைக்கு மேற்புறமாக இவ்விமானம் சென்றுகொண்டு [illegible] விபத்து சம்பவித்ததாம். (உ)

எல்ட்டோமொரோ கடத்தல்:

# யூகோ, கிரேக்கத்தில் கொரில்லாக்கள் சரண்புகுவர்?

ரோம், மார்ச் 17

இத்தாலியின் முன்னுள் பிரதமரும், புதிய ஜனுதிபதியாக பதவி ஏற்க இருந்தவருமான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவர் அல்டோ மொரோ கடத்திச் செல்லப்பட்டது விவேகமற்ற ஒரு செயலென்று அமெரிக்க ஜனுதிபதி திரு ஜிம்மி கார்ட்டர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடத்தல்காரர்கள் கிரேக்கத்தில் அல்லது யூகோஸ்லேவியாவில் தஞ்சமடையலாமென எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அல்டோ மொரோ கடத்திச் செல்லப்பட்டபோது கொரில்லாக்கள் அவரது ஐந்து மெய்க் காப்பாளர்களையும் கொன்றுவிட்டனர். (உ)

## சித்திரத்தேர்

[யாழ்ப்பாணம்]

கட்டுடை அரசடி விநாயகர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கிறது. (உ)


**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்-ஸ்ரீதேவி
**மூன்று முடிச்சு**

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா நடித்த
**நினைத்ததை முடிப்பவன்**

**வெலிலி** (காங்கேசன்துறை)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி-சரோஜாதேவி
**பணமா பாசமா**

**Rio** Jaffna (Phone:7607)
Daily 4 Shows
**THIRTY WINCHESTER**
From 19-3-78
**GOLDEN NEEDLES**
(Karate Film)
Advance Booking Accepted
From 17-3-78 10-00 a. m 12-00 noon 4-00 6-00p. m.

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 & 9-45 p.m.
**SPANISH FLY** (Color)

From 19-3-78 Grand Release
**THE EAGLE HAS LANDED**
(Color)

**வெலிங்டன்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** (யாழ்.நகர்)
போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

இரு தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
**மேயர் மீனுட்சி**

**வின்ஸா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன் மனேரமா
நடித்த
K. R. G. பிக்சர்ஸ்
**ஜானகி சபதம்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜெயலலிதா நடித்த
**அன்பைத்தேடி**
(புதியபிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
**பணக்கார பெண்**
புதிய ஜனுதிபதி அவர்களின் பதவியேற்பு வைபவ காட்சிகளும் காண்பிக்கப்படும்.

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஸ்ரீதரின் **நெஞ்சிருக்குவரை**
சிவாஜி கே. ஆர். விஜயா

நிதியுதவிக் காட்சி 18-3-78 பி. ப. 2-30க்கு மட்டும்
எம். ஜி. ஆர். பத்மினி **அரசிளங்குமரி** புதிய பிரதி

18ம், 19ம், திகதி சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும் ALADIN and the MAGIC LAMP

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
## தெல்லிப்பளை

# பதவிகள் வெற்றிடம்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தராதரம், வயது, அனுபவம், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதியோடு 1978-03-31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் ரூபா 1/- செலுத்திப் பெற்றுக் கொள்ளுதல்வேண்டும், தபால் மூலம் பெற விரும்புவோர் முத்திரையிடப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறையும் ரூபா 1/- பெறுமதியான முத்திரையும் அனுப்புதல்வேண்டும். சங்கத்தின் நிரந்தர சேவையிலுள்ள பணியாளர்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட வயதெல்லை பொருந்தாது விண்ணப்பதாரி குறைந்த பட்சம் 2 வருடங்களுக்காவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல்வேண்டும். இச்சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. பதவி — கணக்குப் பதிவாளர் தரம்
பதவி 1 — நிரந்தரம்

1. கல்வித் தராதரம்: 1. கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. உயர்தரச் சித்தியும் இரண்டு வருட கால அனுபவமும்
அல்லது
2. நான்கு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. உயர்தரச் சித்தியும் கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப் பத்திரமும் ஒரு வருட கால அனுபவமும்
3. கணக்கு எழுதுனர் சேவையின் தரம் 1 பதவியில் பெற்றுள்ள மூன்று வருட கால அனுபவம்
2. வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 20 முதல் 35 வரை
3. பிணை: உரொக்கப் பிணையாக ரூபா 500/- செலுத்துதல்வேண்டும்.
4. சம்பளம் 250—425 / 10X10, 12.50X6

II. பதவி — உள்துறை எண் பார்வையாளர்
தரம் II பதவி 1 நிரந்தரம்

1. கல்வித் தராதரம்:
1. கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப் பத்திரமும் வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. சாதாரணதரச் சித்தியும் ஒரு வருடகால அனுபவமும்.
அல்லது
2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப் பத்திரமும் வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. சாதாரண தரச் சித்தியுடன் ஐந்து வருட கால அனுபவமும்
அல்லது
3. ஒரு வருடகால அனுபவத்துடன் கனிஷ்ட சர்வ கலாசாலையில் எண்பார்வையிடுதலில் பெற்றுள்ள டிப்ளோமா.
4. 5 வருட கால அனுபவம் உடைய கூட்டுறவுப் பரிசோதகர்.

II. வயதெல்லை: விண்ணப்பமுடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.
III. பிணை: உரொக்கப் பிணையாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.
சம்பளம்: 300—500 / 12.50X10, 15X5

III. பதவி: களஞ்சியப் பொறுப்பாளர்
தரம். II—பதவி I நிரந்தரம்

1 கல்வித்தராதரம்:
1. 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. சாதாரண சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் பெற்றுள்ள மூன்று வருடகால அனுபவமும்.
2. வயதெல்லை: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.
3. பிணை: உரொக்கப்பிணையாக ரூபா 1500/-ம் ஆதனப் பிணையாக ரூபா 10,000/- பெறுமதியான ஆதனமும் செலுத்துதல்வேண்டும்.
4. சம்பளம்: 250—400 / 10X10, 12 50X4

பொதுமுகாமையாளர்

16-03-78

8785


# லயன்ஸ் கழக ஆளுநர்
## ஒஸ்வின் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ்கழகத்தின் 306வது மாவட்ட ஆளுநர் லயன் ஒஸ்வின் சில்வா யாழ் லயன் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை இன்று மேற்கொள்கின்றார். அவரை சிறப்பான முறையில் வரவேற்பதற்கான ஏற்பாடுகளை யாழ் மாவட்ட லயன்ஸ்கழகத்தினர் செய்துள்ளனர்.

### விருந்துபசாரம்

ஆளுநரின் வரவைக் கௌரவிக்கு முகமாக இன்றிரவு யாழ்லயன்ஸ் கழகத்தினரால் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகப் பதில் ஆளுநர் டாக்டர் யோகு பசுபதியின் இல்லத்தில் ஒரு விருந்துபசாரம் நடாத்தப் படவுள்ளது. இதில் யாழ் நகரைச் சேர்ந்த பலமுக்கிய பிரமுகர்கள் பங்குபற்றுகின்றனர்.

### செயற்திட்டங்கள்

லயன்ஸ் ஆளுநரின் வருகையை யொட்டி யாழ் மாவட்ட லயன்ஸ்கழகம் நாளை பின் வரும் செயற்திட்டங்களுக்கு ஒழுங்குசெய்துள்ளது.

1. அங்கவீனர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளை அன்பளிப்புச்செய்தல்.

2. இளைஞர்களுக்கான புதிய அபிவிருத்தி சார்ந்த கருத்தரங்கு இக்கருத்தரங்கு இளைஞர்களுக்கு அபிவிருத்தி துறையில் ஊக்கமளிப்பதற்கும் தமது கருத்துக்களை பயனுள்ள விதத்தில் பரிமாறிக் கொள்வதற்கும் வாய்ப்பு அளிப்பதுடன் அவர்கள் செல்லவேண்டிய சரியான பாதையையும் அவர்களுக்கு எடுத்துக்காட்டும்.

இக்கருத்தரங்கு இலங்கை வங்கியின் வடமாகாணத் தலைமை அலுவலகத்தில் காலை 9-30 மணிக்கு நிகழவுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் லயன்ஸ் ஆளுநர் ஒஸ்மன் சில்வா பிரதம விருந்தினராக பங்குபற்றுவார்.

### நவாந்துறையில்

இலங்கையிலேயே முதல் தடவையாக மீன்பிடித்தலை ஊக்கப்படுத்தும் வகையில் யாழ் லயன்ஸ்கழகம் நாவந்துறை வாலிபர்களுக்கு மீன்பிடி வள்ளங்களையும் மீன்பிடி கருவிகளையும் அளிக்க முன்வந்துள்ளது. பதினறு வாலிபர்களுக்கு 4வள்ளங்களையும் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் உதவுவதற்கான இச்செயற் திட்டத்தின் கீழ் நாளை இரண்டு இயந்திர வள்ளங்களும் மற்றும் உபகரணங்களும் லயன்ஸ் ஆளுநர் ஒஸ்வின் சில்வா தலைமையில் எட்டுவாலிபர்களுக்கு வழங்கப்படவுள்ளது. யாழ் லயன்ஸ் கழக ஆதரவில் சீநோரில் பயிற்றப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வள்ளங்களையும் கருவிகளையும் விநியோகிப்பதற்கான நிதிவசதிகளை தவணைக்கடன் முறையில் இலங்கை வங்கி அளித்துள்ளது. (இ)

## தபசுகால செய்தி

(உடுப்பிட்டி)

இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணியார் பேரவைத் தலைவரும், காலி ஆயருமான அதி. வண அந்தனி டி சேரம் நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்களுக்கு விடுத்துள்ள தபசு காலச் செய்தியில் "சமாதானம், அன்பு முதலியவற்றைக் கொண்தான வாழ்க்கையை ஆரம்பிக்கும்படியும், இன பேதங்கள் இன்றி ஒற்றுமையாகவும் கிறிஸ்துவின் இலட்சியத்தைக் கைவிடாது இருக்கும்படியும் வேண்டியுள்ளார்.

## இந்திராவுக்கு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி விசாரணைக்கமிஷன்முன் தெரிவிக்கப்பட்டது.

இளைப்பாறிய நீதிபதி சோமசுந்தரம் தலைமையில் இக்கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

நேற்றைய விசாரணையில் மூன்று நகர சுத்தித் தொழிலாளர்கள் சாட்சியமளிக்கையில் சம்பவதினம் ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளில் கற்கள், கறுப்புக்கொடிகள், போத்தல்கள் காணப்பட்டன என்று கூறினர்.

நகரசுத்தி வண்டிகளுக்கும் அவர்கள் தீ வைத்ததாகவும் கூறினர்.

தி. மு. க. சட்டத்தரணி இவர்களை குறுக்கு விசாரணை செய்தார். (உ)

## கல்விமான்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதுணை புரிவது போல் உடல்வளர்ச்சிக்கு விளையாட்டு உதவிபுரிகிறது. உடல், உள்ளம் ஆகிய இரண்டையும் கவனிக்கும் பாடசாலைகளின் வளர்ச்சியில் நாம் மிகுந்த கவனம்செலுத்தவேண்டும்'' என்றார்.

இவ் விளையாட்டுப்போட்டியில் பேசிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தமதுரையில், ''கல்வித் திட்டம் அடிக்கடி மாற்றப்படுவதால் நாட்டின் கல்வித்திலை ஸ்தம்பிதமடைவதுடன், ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. கல்வித்திட்டத்தில் மாற்றஞ்செய்யும்போது கல்விமான்களைக் கலந்து ஆறுதலாகச் செய்யவேண்டும். கடந்த ஆட்சியின்போது அவசரயுத்தியுடன் செய்யப்பட்ட கல்வித்திட்ட மாற்றங்களின் பலாபலனை நாம் கண்கூடாகக் காண்கிறோம் என்றார். (ப)

## இன்று கொழும்பு லும்பினி கோஷ்டி
## யாழ். இந்து மோதுகின்றன
### நல்லெண்ண விஜயம் இது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு லும்பினி மகா வித்தியாலயத்திற்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் இன்று பிற்பகல் இந்துக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

நாளை இப்போட்டி காலையில் இருந்து மாலைவரை நடைபெறும்.

லும்பினிமகா வித்தியாலயக் குழுவில் கரபந்தாட்ட, உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட வீரர்கள் உள்ளனர்.

இக்குழு யாழ். மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைக் கோஷ்டிகளுடன் பல்வேறு போட்டிகளில் ஈடுபடும் எனத் தெரிகிறது.

இக்குழுவில் 65 பேர் வரை உள்ளனர்.

பிரதிக் கல்விமா அதிபர் திரு. மெண்டிஸின் பணிப்புரையின்பேரில் இந்த தேசிய நல்லெண்ணத்தாதுக்குழு இங்கு வந்துள்ளது. (உ)

## வாலிபர் கொலை வழக்கு:
## வான்சாரதி விடுதலை

(மாவிட்டபுரம்)

வீதியில் சென்றவரை வானல் மோதிக்கொலை செய்ததாக வான் சாரதி ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். மின்சாரசபைக்குச் சொந்தமான வானை சித்தன் கேணி வீதியால் ஓட்டிச் சென்றசமயம் அவ்விடத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் மூத்துலிங்கத்தை வானல் மோதிக் கொலைசெய்ததாக கார்த்திகேசு நவரத்தினம் என்பவர் மீது குற்றஞ் சாட்டி சங்கானைப் பொலிசாரல் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் சாட்சியங்கள் ஆதார பூர்வமானவையாக இல்லாமையால் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்

## வலி-வடக்கு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் 12-வது ஆண்டு விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் நடைபெறுகின்றன.

இன்று பிற்பகல் கரபந்தாட்ட இறுதிப் போட்டிகளும், தாச்சி இறுதிப்போட்டிகளும், வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளும், 'பி'பிரிவு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் நடைபெறுகின்றன.

பிரதம விருந்தினராக கலாசாலை அதிபர் திரு. வி. கந்தசாமி தம்பதிகள் கலந்துகொள்வர்,

உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா தலைமை தாங்குவார்.

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 26 மைல் மரதன் ஓட்டப்போட்டி பலாலி விமான நிலையச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும்.

இதனையடுத்து 15 மைல் பெண்கள் சைக்கிளோட்டமும் தொடர்ந்து 50 மைல் ஆண்கள் சைக்கிளோட்டமும் நடைபெறும்.

பிற்பகல் 'ஏ' பிரிவு இறுதி உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெறும். முன்னாள் காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. கே. ஜெயபாலசிங்கம் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

இதற்கான ஏற்பாடுகளை வலி-வடக்கு விளையாட்டுப் பிரிவு அதிகாரி திரு முருகையா மேற்கொண்டுள்ளார்.

## "தனிச்சிங்களம் தரும் சங்கடம்"

(வெள்ளவத்தை)

''மலையகத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழ்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழரும் முஸ்லிம்களுமாவர். ஆனல் மலையகத்திலுள்ள நகர, பட்டின, கிராமசபைகளிலிருந்து அவர்களுக்கு வரும் கடிதங்கள், அறிக்கைகள் அனைத்தும் சிங்களமொழியில் மட்டுமே இருக்கின்றன. இதனல் சிங்களம் தெரிந்தவர்களை தேடிச் செல்லவேண்டியிருக்கிறது.''

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமருமான திரு. ஆர். பிரேமதாசாவுக்கு தொழிலாளர் தேசியசங்க நிர்வாகப்பொறுப்பாளர் திரு. வி. வி. வேலுப்பிள்ளை அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ். காப்புறுதிக்கூட்டுத்தாபன கொள்ளை

# பறிகொடுத்த காசாளரும் அடையாளம் காட்டவில்லை

## ஆனாலும் சந்தேக நபரைப் பிணையெடுக்க ஆளில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கொள்ளை சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவரை, பணத்தைப் பறிகொடுத்த காசாளரும் அடையாளம் காட்டுவதற்கு நேற்றுத் தவறிவிட்டார்.

இதனால் சந்தேகநபரான சின்னையா கிருஷ்ணன் அல்லது மீராசா என்றழைக்கப்படும் சந்தேகநபரை ஆயிரம் ரூபாய் பிணையில் செல்வதற்கு நீதவான் அனுமதித்தார். ஆயினும் அவரைப் பிணையெடுக்க எவரும் முன்வராததால் சந்தேகநபரை இம்மாதம் 27ந் தேதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 4ந் தேதி, யாழ்ப்பாணம் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் காசாளர் கதிரித்தம்பி சபாரத்தினம் இலங்கை வங்கியில் ஒப்படைப்பதற்காக பதிமூவாயிரத்து ஐநூற்றிரண்டு ரூபாய் பதினெட்டுச் சதத்தை எடுத்துச் சென்றபோது இடைவழியில் வைத்து இருவர் கொள்ளையடித்துக் கொண்டு சென்றதும், அவர்களில் ஒருவர் துரத்திப் பிடிக்கப்பட்டதும் தெரிந்ததே

இதுவரை தலைமறைவாகியிருந்த மற்றொரு சந்தேகநபரான சின்னையா கிருஷ்ணன் அல்லது மீராசா அண்மையில் கைதாகியிருந்தார்.

இவரை அடையாளம் காண்பதற்கான அணிவகுப்பு, யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது புனிதசீலன் என்ற சாட்சி மட்டும் அடையாளம் காட்ட அழைக்கப்பட்டிருந்தார். அவர் அடையாளம் காட்டத் தவறியதைத் தொடர்ந்து சந்தேகநபர் நிரந்தர நீதவான் திரு கே நவரத்தினம் முன் ஆஜர் செய்யப்பட்டபோது நேற்றுப் பதினேழாந் தேதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

நேற்றுப் பணத்தைப் பறிகொடுத்த காசாளர் கதிரித்தம்பி சபாரத்தினம் சந்தேக நபரை அடையாளம் காண்பிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரும் சந்தேக நபரை அடையாளம் காட்டத் தவறியதால் சந்தேக நபரை ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது ஆயினும் பிணை எடுக்க எவரும் முன்வராததால் சந்தேக நபரை இம்மாதம் 27ந் தேதி வரை நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## சம்பளம்முழுவதையும்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு வந்தது.

இவ்வழக்கில் முதலாவது எதிரியாக சட்டமா அதிபரும் இரண்டாவது எதிரியாக கான்ஸ்டபிள் ஸ்டான்லியும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

சட்டமா அதிபரின் சார்பில் அரச சட்டத்தரணி திரு. ஞானகரன் சட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். இரண்டாம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை அவருக்காக சட்டத்தரணியும் ஆஜராகவில்லை. வழக்காளியின் சார்பில் சட்டத்தரணி எஸ். எஸ். நடேசன் கியூ. ஸி, திரு. கே. கந்தசாமி, ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் திரு. வெ. யோகேஸ்வரனின் அனுசரணையுடன் ஆஜராகினர்

மரணமான பரராசாவின் தந்தையான வழக்காளி சின்னத்தம்பி பொன்னம்பலம் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

"நான் காலஞ்சென்றவரின் தகப்பன். எனக்கு எல்லாமாக ஒன்பது பிள்ளைகள். காலஞ்சென்றவர் மட்டுமே க. பொ. த. (சாதாரணம்) வரை படித்தவர். ஏனையவர்களோ அதிகம் படிக்கவில்லை. மூத்த மகன் செல்வராசா அவரது திருமணம்வரை மட்டுமே எனக்கு பணம் கொடுத்துவந்தார். அவரது திருமணத்தின் மூலம் பெற்ற சீதனம் பத்தாயிரம் ரூபாயையும் மகளுக்குத் திருமணத்திற்காகச் செலவழித்தேன்.

இறந்தவர் எனக்கு தனது முழுச்சம்பளத்தையும் கொடுத்துவந்தார். அத்துடன் அவர் சிங்களப்பரீட்சைகளில் சித்திபெற்று வங்கிப் பரீட்சைகளிலும் சித்தி பெற்றிருந்தமையால் மாதம் ஆயிரம் ரூபாவரை உழைக்கக் கூடிய முறையில் முன்னேறக்கூடியவர்.

### வரவும் செலவும்

இப்போது எனது குடும்பத்திற்கு மாதச் செலவுக்கு 750 ரூபாவுக்கு குறையாமல் தேவைப்படுகின்றது. ஆனால் எங்கள் இன்றைய தோட்ட வருமானங்கள் மூலம் 450 ரூபாவரையிலேயே கிடைக்கின்றது.

எனது மகனின் இன்சூரன்ஸ் மூலம் கிடைத்த நஷ்டஈட்டுத்தொகை 5000 ரூபாவில் 2000 ரூபா அவரது மரணச் சடங்கிற்கு செலவழிந்துவிட்டது. 3000 ரூபா எனது வாழ்க்கைச் செலவுகளில் செலவாகிவிட்டது. இன்று கடன்பட்டே சீவிக்கின்றேன். அத்துடன் எனக்குப் பெண்பிள்ளைகளும் இருப்பதால் அவர்களுக்கு திருமணச் செலவுகளை செய்ய வேண்டியுள்ளது.

இறந்தவருக்கு இறப்பதற்கு முன் 25,000 ரூபா நன்கொடையுடன் திருமணம் பேசிவந்தது. எனவே எனக்கு இறந்தவரின் இழப்பால் 50,000 ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளது. ஆயினும் முத்திரைச் செலவுகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே 50,000 ரூபா நட்டஈடு கோருகிறேன். அதனை வழங்கும்படி அரசுக்குத் தீர்ப்பளிக்கவேண்டுகின்றேன்.

இத்துடன் வழக்காளி தரப்பில் சாட்சியங்கள் முடிவுற்றன. இதனையடுத்து எதிரி தரப்பிலான சாட்சியங்கள் ஆரம்பமாகியது. (கி)

## விஞ்ஞான ஆய்வுகூடம் இன்று திறப்பு

(வவனியா)

நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் புதிய விஞ்ஞான ஆய்வுகூடத்தை இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வவனியாப் பிரதம கல்வியதிகாரி திரு. எம். சிமியாம்பிள்ளை திறந்துவைப்பார். இவ்வைபவத்தில் வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## பஸ்ஸில் தொலைத்த சங்கிலி மீளக் கிடைத்தது!

### பஸ் கண்டக்டருக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸில் தவறவிடப்பட்ட ஐந்து பவுண் தங்கச் சங்கிலி ஒன்றை, பஸ் கண்டக்டர் எடுத்து, யாழ். பஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்து, பின்னர் அந்தச் சங்கிலி உரியவரிடம் சேர்க்கப்பட்டது.

768ம் இலக்கப் பாதையில் சேவையில் ஈடுபட்டிருந்த 23 ஸ்ரீ 4227 இலக்கத்தைக் கொண்ட பஸ்ஸில் பிரயாணஞ்செய்த ஒருவர் தவறவிட்ட ஐந்து பவுண் சங்கிலியொன்றை பஸ் கண்டக்டர் விநாயகமூர்த்தி கண்டெடுத்து பஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தார்.

சங்கிலியைத் தொலைத்த உடுவில் டச்வீதியைச் சேர்ந்த செல்லையா ராசம்மா, பஸ்நிலையத்துக்குச் சென்று, தாம் புதிதாக வாங்கிய அந்தச் சங்கிலியின் பற்றுச் சீட்டைக் காண்பித்துச் சங்கிலியை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு, பஸ் கண்டக்டரையும் பஸ்நிலைய ஊழியரையும் பாராட்டிச் சென்றார்.

## யாழ். நகரில்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டம் கேட்டறிந்து கொண்டார்.

தூதுவர் தம்பதிகள் அகதிகளுக்கு ஆறுதல் கூறியதுடன் அமெரிக்கா அவர்களுக்கு மேலும் உதவிசெய்ய விருப்புவதாகவும் விரைவில் இந்த உதவி கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

மாலை யாழ். பொது நூலகத்தில் 10,000 ரூபா பெறுமதியுள்ள விலையுயர்ந்த நூல்களை அமெரிக்க மக்களின் சார்பில் தூதுவர் கையளித்தார்.

### யாழ்.றிம்மர் மண்டபத்தில்

'மனித உரிமைகளும் முடிவில்லாதேடுதலும்' என்னும் பொருள்பற்றி தூதுவர் இன்று மாலை 6மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் உரையாற்றுவார்.

## தனிநபர்போல அரசும்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் இறந்தவர் 1000 ரூபா மாதம் உழைக்க கூடிய முறையில் முன்னேறக்கூடிய வசதியிருந்தது என வங்கி முகாமையாளரே இங்கு சாட்சியமளித்தாரெனவும் ஆகவே 50,000 ரூபா நஷ்ட ஈடு கொடுப்பது நியாயமானதென்றும் திரு நடேசன் கூறினார்.

### அங்குவழங்கியது போல இங்கும்

அவர் மேலும் இலங்கையில், சிங்களவர் ஒருவரைப் பொலிசார் சுட்டபோது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவரின் மனைவிக்கு சமாதானமான முறையில் அரசு 50,000 ரூபா நஷ்டஈடு வழங்கியுள்ளதென்றும் எனவே தமிழராகிய வழக்காளிக்கும் 50000 ரூபா வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

திரு நடேசன் ஒருகட்டத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகாத 2ம் எதிரியான ஸ்ரான்லிக்கு எதிராக பின்னுறுத்தி தீர்வை எழுதுமாறு நீதிபதியைக் கேட்டுக் கொண்டார் நீதிபதி அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

தொகுப்புரைகள் முடிந்ததை அடுத்து நீதிபதி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

## ஸ்ரான்லியிடம் சுடும்படி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் கட்டளை இடவில்லை என்று இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை கூறியதைத் தொடர்ந்து வழக்காளி தரப்பில் ஆஜரான திரு. எஸ் நடேசன் கியு.ஸி. சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். திரு. நடேசனின் கேள்விகளுக்கு சாட்சி தாமோதரம்பிள்ளை பதிலளிக்கையில் தானும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அலங்கோடையும், கான்ஸ்டபிள் ஸ்ரான்லியும், தர்மதாசாவும் வேறு சிலரும் துப்பாக்கிகளுடனும் துப்பாக்கி குண்டுகளுடனும் பஸ் எரிந்து கொண்டிருந்த இடத்துக்கு ஜீப்பில் சென்றதாகவும் அங்கு சென்றதும் ஒவ்வொரு பகுதியாகப் பிரிந்து சென்றதாகவும் சிறிது நேரத்தின்பின் ஸ்ரான்லி வந்து தான் ஒருவரைச் சுட்டுவிட்டதாகச் சொன்னதாகவும் கூறினார்.

இக்கட்டத்தில் குறுக்கிட்ட நீதிபதி அங்கு வேறு எதைக் கண்டீர் என்று கேட்டபோது 'ஒரு பஸ்ஸைத்தவிர வேறு சனங்களையோ சைக்கிள்களையோ காணவில்லை என்று சாட்சி கூறினார்.

மஞ்சத்திருவிழாவான அன்று சனங்கள் அவ்வழியால் வரவில்லையா? என்று நீதிபதி கேட்டதற்குச் சாட்சி பதிலளிக்கையில் தனக்கு ஞாபகமில்லையென்றார்.

திரு. தாமோதரம்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் ஸ்ரான்லிமீது மேல்நீதிமன்றத்தில் கொலைக்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதென்றும் இப்படியான குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் உடனடியாகத் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட வேண்டுமென்றும் ஆனால் தான் அறிந்தவரையில் ஸ்ரான்லி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படவில்லையென்றும் தொடர்ந்தும் கடமையாற்றி வருகிறாரென்றும் கூறினார்.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் இறந்தவரின் மரண விசாரணை நடந்தபின் நீதவானால் ஸ்ரான்லி விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்றும் ஆனால் விமானமூலம் வழக்கு விபரங்கள் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டபின் சட்டமா அதிபரால் ஸ்ரான்லியை விடுவிக்குமாறு நீதவானுக்குஉத்தரவுபிறப்பிக்கப்பட்டதென்றும் திரு. தாமோதரம்பிள்ளை மேலும் குறுக்குவிசாரணையில் தெரிவித்தார்.

## கூட்டணி கருத்தரங்கு இன்று

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு இன்றுமாலை தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனையில் நடைபெறும்

இக்கருத்தரங்குக்கு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமை தாங்குவார். கருத்தரங்கில் "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வோம்" என்ற தலைப்பில் கருத்துரைகள் இடம் பெறும்.

காரை சுந்தரம்பிள்ளை, ஈழவேந்தன், சட்டத்தரணி, எஸ்.மகேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். [கெ-இ]

## பெற்றோல் நிலைய மனேஜரின் பெருந்தன்மை

[மாவிட்டபுரம்]

பெற்றோல்நிலையத்தில் விட்டுச்செல்லப்பட்ட பெறுமதிவாய்ந்த தங்கச்சங்கிலியை பத்திரமாக எடுத்து வைத்திருந்து சொந்தக்காரரிடமே அதை ஒப்படைத்தார் பெற்றோல்நிரப்புநிலைய மனேஜர் ஒருவர்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க காங்கேசன்துறை பெற்றோல் நிரப்புநிலையத்திலேயே இது நடந்தது.

இரவுநேரத்தில் இங்கு பெற்றோல் பெறவந்த நபர் ஒருவர் 5000 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை தவறவிட்டுச் சென்றுவிட்டார். பல இடங்களிலும் தேடுதல் நடத்தியபின் மேற்படி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு வந்தபோது அந்நிலைய மனேஜர் தாம் பத்திரமாக எடுத்துவைத்திருந்த தங்கச்சங்கிலியை அவரிடம் கொடுத்தார்.

இம் மனேஜரின் நேர்மைக்காக அவர் வழங்கிய சன்மானத்தைக்கூட அவர் ஏற்க மறுத்துவிட்டார். அதை கீரிமலை கிருஷ்ணன் கோயிலுக்கு வழங்குமாறும் மனேஜர் கூறினார். (இ)

## வித்தியாலங்கார வளாகத்திலேயே குண்டு வெடிப்பு

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வித்தியாலங்கார வளாகத்திலேயே நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்றது.

நேற்றைய ஈழநாடு இதழில் வித்தியோதய வளாகம் என வெளிவந்த செய்தி தவறு.

[ஆ-ர]

## பாதிக்கப்பட்ட—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் பாதிக்கப்பட்ட மாணவர்களே புதிதாக அமைக்கப்படும் வளாகங்களில் அனுமதிக்கப்படுவர் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் தாபனத்தாருக்காக யாழ்ப்பாணக் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka